இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் -இலங்கை-
'ழ்கள்.. 436. யூலை 9, 1993.,437. யூலை 30, 1993., 438. ஆகஸ்ட் 13, 1993.,439. செப் 3,1993.
சோசலிசத் தொழிலாளர் கழகம் -இந்தியா- இதழ் இல. 61. ஆகஸ்ட் 1993.

தொகுப்புப் பிரதி இலக்கம்.09 செப்டம்பர். 1993.

விலை 2-

மார்க்ஸ், எங்கேல்ஸ், லெனின், ட்றொட்ஸ்கி
**புத்தகக் கண்காட்சி**
வெலிமட சூரிய படமாளிகை
யூலை 10, 11,
கேகாலை சென் மேரிஸ் கல்லூரி
யூலை 10, 11, 12
காலை 9 மணி — மாலை 5 மணி வரை
அமைப்பு:– 'தொழிலாளர் பாதை'
வெளியீட்டாளர்கள்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் –
இளம் சோசலிஸ்டுகள்

## சோசலிச அனைத்துலகவாதத்தை பிரகாசமாக்குகின்றது

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா**

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 25 வது ஆண்டு நிறைவு விழா ஜூன் மாதம் 27ம் திகதி அனைத்துலகக் குழு பிரதிநிதிகள் கலந்து கொண்ட சிறப்பு கூட்டம், கண்காட்சியுடன் கொழும்பு பொது நூலகக் கேட்போர் கூடத்தில் விமரிசையாக கொண்டாடப் பெற்றது.

(4'ம் பக்கம் பார்க்கவும்)




புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக 25வது ஆண்டு நிறைவு விழா மேடை

# விஜேதுங்க அரசாங்க இனவாத ஒடுக்குமுறை உக்கிரம்: விடுதலைப் புலிகள் தலைமை பிற்போக்கு உறவுக்கு துடிக்கின்றது

ஜனாதிபதி விஜேதுங்கவின் யூஎன்பி அரசாங்கத்துடன் பிற்போக்கு அரசியல் கொடுக்கல் வாங்கல்களுக்கான முஸ்தீபுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது, விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ள 89 பொலிசாரை விடுதலை செய்யவும், வடக்கே செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்த சில பொருட்களை யாழ்ப்பாணம் அனுப்ப விஜேதுங்க அரசாங்கம் செய்து கொண்டுள்ள முடிவின் பின்னணியில் இந்த அரசியல் உறவுகளுக்கான மேடை தயாராகி வருகின்றது.

இன்று அபிவிருத்தி கண்டு வரும் இந்நிலைமைக்குச் சைகை காட்டும் விதத்தில் அரசாங்கச் செய்தி ஏஜன்சியான 'லங்கா புவத்' வெளியிட்ட அறிக்கையை அரசாங்க ஊதுகுழலான லேக் ஹவுஸ் பத்திரிகைகள் ஜூன் 24ம் திகதி வெளியிட்டனர். "புலிகள் சமாதானத்துக்கு நிஜ விருப்பம் காட்டுவதாக பிரிகேடியர் கூறுகிறார்".

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிசார் தம்மை விடுதலை செய்யக்கோரி 'உண்ணாவிரதம்' ஆரம்பித்ததில் இருந்து விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஆளுக்காள் சமிக்கை விடத் தொடங்கினர், பொலிசாரை விடுதலை செய்வதாயின் கொழும்பு அரசாங்கம் கைது செய்துள்ள புலிகள் இயக்க உறுப்பினர்களை விடுதலை செய்ய வேண்டுமென விடுதலைப் புலிகள் கோரிய போதிலும் அரசாங்கம் தாம் விடுதலை செய்யத் தயாராகவுள்ள 90 பேரின் பெயர்களை மட்டுமே சமர்ப்பித்தது.

இதற்கிடையே கொடுக்கல் வாங்கல்களுக்கு வெறிபிடித்து அலையும் விஜேதுங்க அரசாங்கம் வாய்ப்பைப் பயன்படுத்த எண்ணியது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் சென்ற பொலிசாரின் பெற்றோருடன் அரசாங்கம் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவை தனது பிரதிநிதியாக அனுப்பியது. ஐந்து பொலிசாரை விடுதலை செய்ததன் மூலம் இந்தக் காதல் களியாட்டங்களில் இறங்கிய விடுதலைப் புலிகள் தலைமை, எஞ்சிய 34 பொலிசாரையும் விடுதலை செய்ய வடக்கே செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ள பண்டங்களில் சிலவற்றை அனுப்புமாறு அரசாங்கப் பிரதிநிதியை வேண்டிக் கொண்டுள்ளது. இப்போது விஜேதுங்க அரசாங்கம் சில பொருட்களை வடக்கே அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய "...அரசாங்கப் பிரதிநிதி இம்முறை விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு நிஜ விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.' 'எவருக்கும் யுத்தம் அவசியம் இல்லை' என பாலசிங்கம் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கு பெரும் அக்கறை காட்டுவதாக தெரிகிறது. என பிரிகேடியர் குறிப்பிட்டார். அவர் விடுதலைப்புலிகளின் செய்தியை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்." அரசாங்கத்தின் ஊதுகுழல்கள் நிலைமையை இந்த இலட்சணத்தில் வருணித்திருந்தன.

(5 ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

www.padippakam.com



# அமெரிக்க ட்ரொட்ஸ்கிச வேர்க்கஸ் லீக்கின்

# வாழ்த்துச் செய்தி

**அன்பின் தோழர் விஜே,**

இந்த வரலாற்றுப் பெருமை நிறைந்த கொண்டாட்டத்தில் 'வேர்க்கஸ் லீக்' புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமைக்கும் அங்கத்தவர்களுக்கும் மாபெரும் பெருமிதத்துடனும் அரசியல் திருப்தியுடனும் அதன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. ஒரு கால் நூற்றாண்டு காலத்துக்குப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உலகம் பூராவும் உள்ள ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு ஒரு அரசியல் ஊக்கத்தின் மூலமாக இருந்து வந்துள்ளது. மிகவும் கஷ்டமான நிலைமைகளின் கீழும் கூட மார்க்சிசத்தின் அடிப்படைக் கொள்கைகளைச் சளைக்காது காக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் செயற்பாட்டினால் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அளப்பரிய விதத்தில் பலமூட்டப்பட்டது. உண்மையில் அனைத்துலகக் குழுவின் உயிர் நீடிப்பும் ட்ரொட்ஸ்கிசத்தின சந்தர்ப்பவாத எதிரிகளுக்கு எதிரான போராட்டத்தில் அதன் நீண்ட நடையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தீர்க்கமான பங்களிப்புக்கள் இல்லாமல் சாத்தியமாகியிராது எனக் கூறுவது, எந்தவிதத்திலும் கூட்டி மதிப்பிடுவதாகாது.

அனைத்துலகக் குழுவின் வரலாற்றுடன் அறிமுகமானவர்கள் வேர்க்கஸ் லீக்குக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் இடையே மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஐக்கியத்துக்கான பந்தம் உருவாக்கப்பட்டதை அறிவர். முதலாவதாக 1963 ஜூனில் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி பப்லோ, மண்டேல் தலைமையிலான அனைத்துலகச் செயலகத்துடன் கொள்கையற்ற மறுஐக்கியத்துக்கு சென்றமைக்கும், இரண்டாவதாக 1964 ஜூனில் லங்கா சமசமாஜக் கட்சி திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்துள் நுழைந்தமைக்கும் எதிரான போராட்டங்களின் வரலாற்றுப் பின்னணியிலேயே வேர்க்கஸ் லீக், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இரண்டும் தோன்றின.

வேர்க்கஸ் லீக்கின் ஸ்தாபகர்கள் சோசலிசத் தொழிலாளர் கட்சியினுள் ஒரு சிறிய ட்ரொட்ஸ்கிசக் குழுவினரை கொண்டிருந்தனர், இவர்கள் பப்லோ, மண்டேலின் சந்தர்ப்பவாத அனைத்துலக அமைப்புடனான மறுஐக்கியத்தினை எதிர்த்ததோடு ஓராண்டின் பின்னர் இதன் பேரழிவுமிக்க விளைவுகள் உணரப்பட்ட வேளையில் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பை வன்மையாக எதிர்த்தனர். இந்தக் காட்டிக் கொடுப்பின் மூலங்களையும் 1963ன் கொள்கையற்ற மறுஐக்கியத்துடனான திட்டவட்டமான உறவுகளையும் ஆராய ஒரு கலந்துரையாடலைக் கோரியமை அவர்களைச் சோசலிச தொழிலாளர் கட்சியில் இருந்து வெளியேற்றவும், 1966ல் வேர்க்கஸ் லீக் காக உத்தியோக பூர்வமாக நிறுவப்பட்ட நான்காம் அகிலத்தின் அமெரிக்கன் கமிட்டியின் ஸ்தாபிதத்துக்கும் இட்டுச் சென்றது.

6000 மைல்களுக்கு அப்பால் இத்தகைய ஒரு புரட்சிகர எதிர்ப்புப் போக்கும் மறுஅணிதிரள்வும் இடம்பெற்று வந்தது. முதலில் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்புக்கும் பின்னர் பாலா தம்புவின் மத்தியவாத தலைதப்பல்களுக்கும் நழுவல்களுக்கும் எதிரான போராட்டம் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபிதத்துக்கு இட்டுச் சென்றது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிறுவப்பட்ட அடி அத்திவாரத்தின பலம் அதன் அடுத்து வந்த முழு வரலாற்றினால் பிரத்தியட்சமாக்கப்பட்டது. உலக வரலாற்றின் இராட்சத அளவுகோல்களில் 25 ஆண்டுகள் சொற்பமானவை என்பதில் சந்தேகமில்லை என்பது உண்மையே, ஆனால் 25 ஆண்டுகள் இன்னமும் 25 ஆண்டுகளே, புரட்சிகரமானவை எனக் கூறிவந்த எத்தனை அரசியல் அமைப்புக்கள் இதைவிட மிகவும் குறுகிய காலத்துக்கேனும் தமது செல்வாக்கினையோ, அல்லது புகழையோ அழிபாடுகளில் இருந்து காத்துக் கொண்டுள்ளன? கடந்த தசாப்தத்தில் மட்டும் வரலாறு தம்மைத் தொழிலாளி வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் நலன்களின் பிரதிநிதிகளெனக் கூறிவந்த எண்ணற்ற அமைப்புக்களுக்கு இரக்கமற்ற தாக்குதல் தொடுத்துள்ளது. ஒரு சில வருடங்களுக்கு முன்னர் இலட்சோப லட்சம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொண்ட கட்சிகள் புவியில் இருந்து மறைந்துவிட்டதோடு, முன்னர் அவற்றில் செல்வாக்கான பதவிகளை வகித்த பரந்த அதிகாரத்துவத்துவத்தினரால் மட்டுமே அவற்றின் மரணத் துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வண்ணம் அவமானம் நிறைந்த முறையில் சரிந்தவை ஸ்டாலினிஸ்டுகளதும் சமூக ஜனநாயக வாதிகளதும் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மட்டுமல்ல.



டேவிட் நோர்த்

கடந்த 10 ஆண்டுகளின் நிகழ்வுகளும், முதலாளித்துவ தேசியவாதிகளதும், தீவிரவாத, குட்டி முதலாளிகளதும் 'தேசிய விடுதலை' இயக்கங்கள் எனப்பட்ட சகலதினதும் அரசியல் வங்குரோத்தினையும் ஏகாதிபத்தியம் மீதான உயிர்பிழைப்பு சார்பினையும் அடியோடு உரித்துக் காட்டியுள்ளது. இறுதி ஆய்வுகளில் அவற்றின் சமரசமின்மை எனப்பட்டது ஒன்றில் சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதரவில் அல்லது ஏதோவொரு ஏகாதிபத்தியச் சக்தியின் ஆதரவிலேயே முற்றிலும் தங்கியிருந்தது. எந்தவொரு விடயத்திலும் அத்தகைய எந்தவொரு இயக்கமும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட வெகுஜனங்களின் ஜனநாயக அபிலாசைகளை நிஜமாக அடைவதற்கோ அல்லது பயங்கரமான சமூகப் பிரச்சினைகளைப் போக்கவோ ஒரு வேலைத் திட்டத்தினை முன்வைத்தது கிடையாது.

ஆனால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கடந்த 25 ஆண்டுக் காலப் போராட்டங்களில் நின்றுபிடித்ததோடு மட்டுமன்றி அது தனது அரசியல் பலத்தையும் அந்தஸ்த்தினையும் நிலையாக அதிகரித்துக் கொண்டுள்ளது. 1968ல் இருந்து பு.க.க. ஒரு பரந்த அளவிலான அரசியல் அனுபவத்தினைத் திரட்டிக் கொண்டுள்ளது. அது இலங்கைகையின் அரசியல் வாழ்வின் வெடிப்பு நிறைந்த சுகதுக்கங்களைப் பிரதிபலிக்கின்றது, மிகவும் மாறுபட்டதும் கஷ்டமானதுமான நிலைமைகளின் கீழ் பு.க.க. ஒரு உறுதியான மார்க்சிச, புரட்சிகர நிலைப்பாட்டை முன்வைத்து வந்துள்ளது. மேலும் காட்டுமிராண்டி சோவினிச கலவரங்கள், இரத்தம் தோய்ந்த இனவாத யுத்தத்தின் முன்னிலையிலும் பு.க.க. தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாசைகளைக் காக்கும் ஈடாட்டமின்மையையும் ஏகாதிபத்தியத்துக்கும் அதன் சகல உள்ளூர் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ ஏஜன்டுகளுக்கும் எதிரான பொதுப் போராட்டத்தில் சிங்கள, தமிழ் தொழிலாளர்களின் புரட்சிகர ஐக்கியத்திற்கான சமரசமற்ற அர்ப்பணத்தினையும், நிதர்சனமாக்கியது. இலங்கை—தமிழீழம் ஐக்கிய சோசலிச அரசுகளுக்கான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அழைப்பு இன்றுள்ள சகல முதலாளித்துவக் கட்சிகள், அமைப்புக்களின் சோவினிசமும், இனவாதக் குறுங்குழுவாதங்களையும் தாண்டி சிங்கள—தமிழ் வெகுஜனங்களின் பொதுப் பிரச்சினைகளுக்கு மதிப்பும், நின்றுபிடிக்கக் கூடியதுமான ஒரே தீர்வினை முன்வைக்கின்றது.

இலங்கையின் உள்ளே பு.க.க. தொடுத்த போராட்டத்தின அரசியல் பலம், அது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பணிகளில் ஆற்றிய தீர்க்கமான பாத்திரத்துடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்து கொண்டுள்ளது. அனைத்துலகக் குழுவின் சகல சக சிந்தனையாளர்களுடன் முறையான தொடர்புகளைக் கொண்டிருக்கவும் தனது கருத்துக்களை வெளிவெளியாகக் கலந்துரையாடவும் சகல வாய்ப்புக்களும் மறுக்கப்பட்ட போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் அரசியல் பின்னடிப்புக்களை எதிர்த்து நின்றது. ஹீலி, சுலோட்டர், பண்டாவின் சந்தர்ப்பவாத போக்குக்கு எதிரான வெளிப்படையான எதிர்த் தாக்குதலுக்கான சாத்தியம் 1985ல் ஏற்பட்ட போது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், கீர்த்தி பாலசூரியவின் தலைமையில் அனைத்துலகக் குழுவின் புரட்சிகர மறுமலர்ச்சிக்கு ஒரு தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது.

1987 டிசம்பர் 18ல் தோழர், கீர்த்தியின் திடீர் அகால மரணம், பு.க.க. வுக்கும் முழு அனைத்துலகக் குழுவுக்கும் ஒரு கொடிய பேரடியாக விளங்கிற்று. எம் மத்தியில் இருந்த ஒரு கூரிய மார்க்சிசக் கோட்பாட்டாளரும் உறுதியான போராளியும் இழக்கப்பட்டார், தோழர். கீர்த்தியின் மரணம் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான புதியதொரு பாசிச ஜேவீபி பயங்கரவாதிகளின் அலைவீச்சினிடையே ஏற்பட்ட போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தலைமைப் பீடம் இந்தப் பயங்கரமான இழப்பில் இருந்தும் கூடத் தலையெடுத்தது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜேவீபியின் கொலைகாரத் தாக்குதல்களுக்குத் தோழர்கள். பிட்டவெல, குணபால, கிறேசனை இழக்க நேரிட்டது. இந்தத் தாக்குதல்கள் லங்கா சமசமாஜக் கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் எதிர்பார்த்த கோழைத்தனங்களுக்கு இடையே இடம்பெற்ற போதிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கான போராட்டம் தொழிலாளி வர்க்கத்தினை அளப்பரிய முறையில் பலப்படுத்தியதோடு நிஜ ட்ரொட்ஸ்கிசத்தின் ஆளுமையையும் அதிகரித்தது.

நாம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் வரலாற்றுப் பயணத்தில் ஈட்டிக்கொண்டுள்ள அனைத்தையுமிட்டு நியாயமான முறையில் பெருமிதம் அடைகின்றோம். நாம் அதன் மறைந்த தலைவர் கீர்த்தி பாலசூரியவையும் அனைத்துலக சோசலிசத்துக்காகத் தமது உயிர்களைத் அர்ப்பணம் செய்த தியாகிகளையும் மதிப்புடன் நினைவு கூர்கின்றோம். அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு பல தசாப்தங்களாக தியாகமும், முன்மாதிரியுமான சேவை ஆற்றியுள்ள பரீட்சிக்கப்பட்ட தலைவர்களை— இங்கு தோழர். விஜே, தோழர். ரத்நாயக்க மற்றும் ஊக்கம் நிறைந்த ஸ்தாபக அங்கத்தவர்கள் — நாம் பாராட்டுகின்றோம்.

இம்மாபெரும் ஆண்டு நிறைவு விழாவினை நாம் கொண்டாடுகின்ற வேளையிலும் மிகவும் கஷ்டமான சவால்கள் எதிரே உள்ளன என்பதை நாம் அனைவரும் அறிவோம், நாம் முயற்சிப்பது வெறுமனே சகித்துக் கொண்டிருக்க அன்று, வெற்றியீட்டிக் கொள்ளவே. எமது இலக்கு, தொழிலாளி வர்க்கத்தின் ஆட்சி, சட, ஆன்மீக விடுதலையை புரட்சிகரமான முறையில் வெற்றியீட்டுவதே. மேலும் இலங்கைக்கு உள்ளே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளின் வெற்றி, இந்தியாவிலும் ஆசியா பூராவும் அனைத்துலகக் குழுவின் உறுதியான வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது என்பதை நாம் அறிவோம். ஆசியா பூராவும்—எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவில் ட்ரொட்ஸ்கிசத்தின் பரம்பலுக்கு அனைத்துலகக் குழு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நேரடி முயற்சியில் பெரிதும் தங்கியுள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் நாம் வேறு இரண்டு ஆண்டு நிறைவுகளை —அனைத்துலகக் குழுவின் ஸ்தாபிதத்தின் 40 வது ஆண்டு நிறைவும், இடதுசாரி எதிர்க் கட்சியின் ஸ்தாபிதத்தின் 70வது ஆண்டு நிறைவும் —அனுஷ்டிப்போம். இச்சகல ஆண்டு நிறைவுகளும் ஒரே வரலாற்றுத் தொடர்பின் அத்தியாவசியமான தருணங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. அந்த விதத்தில் பு.க.க. வின் வரலாறு ட்ரொட்ஸ்கி 1923ல் அக்டோபர் புரட்சியின் வேலைத்திட்டமும் முன்னோக்கும் ஸ்டாலினால் காட்டிக் கொடுக்கப்பட்டதற்கு எதிராக ஆரம்பித்த போராட்டத்தின பெறுபேறும் சமகால வெளிப்பாடும் ஆகும்.

★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நீடூழி வாழ்க!

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நீடூழி வாழ்க!

புரட்சிகர வாழ்த்துக்களுடன்
டேவிட் நோர்த்

மார்க்சிச முன்னோக்கு

சர்வதேச தொழிலாளவர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரொக்சிய சஞ்சிகை

சோவியத்யூனியனின் முடிவும் சோசலிசத்தின் எதிர்காலமும்

"சிந்தனை" பத்திரிகையின் பப்லோவாத முகமூடி கிழிகின்றது

யூகோசிலாவியாவின் உள்நாட்டுப் போரின் பின்னணியில்

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினது வெளிநாட்டுக் கிளையின் வெளியீடு

இதழ் 1 இலக்கம் 1 ஆனி 1992

படிப்பகம்

www.padippakam.com



# ஒரே முன்வழி தொழிலாள வர்க்க அனைத்துலக ஐக்கியமே

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் பூண்டதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தோழமை அமைப்புமான இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் அதன் செயலாளர் தோழர். அருண் குமார் ஆண்டு நிறைவு விழாவில் வாழ்த்துச் செய்தி வழங்கி நிகழ்த்திய உரை



25வது ஆண்டு நிறைவு விழாக் கூட்டத்தில் தோழர். அருண்குமார் உரையாற்றுகின்றார்.

## அன்பின் தோழர்களே,

நானும் தோழர். ராமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த 25வது ஆண்டு நிறைவு விழாவுக்கு இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் சகல அங்கத்தவர்களதும் புரட்சிகர நல்வாழ்த்துக்களுடன் வருகை தந்துள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் பு.க.க.வின் முன்னாள் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் கீர்த்தி பாலசூரியவை மிகுந்த கௌரவத்துடன் நினைவு கூர்வதோடு எமது மரியாதையையும் செலுத்துகின்றோம். அவ்வாறே பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தினைக் காக்கும் தமது போராட்டத்தினுள் தமது உயிர்களைத் தியாகம் செய்த பு.க.க. அங்கத்தவர்களுக்கு நாம் மரியாதை செலுத்துகின்றோம். சோதனைக்குள்ளான காலத்தில் இருந்து தோன்றிய இன்றைய பு.க.க. தலைமை, தோழர் கீர்த்தி பாலசூரியவும் ஏனைய தோழர்களும் உயிர்த்தியாகம் செய்த போராட்டத்தினை இறுதிவரை முன்னெடுப்பர் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

1985-86 பிளவின் போது தொழிலாளர் புரட்சிக் கட்சியின் பப்லோவாத கலைப்பாளர்களுக்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வேலைத்திட்ட அடிப்படையைக் காக்க புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்திய திடசங்கற்பம் மிகுந்த போராட்டம் இல்லாது போயிருக்குமானால் இந்தக் கூட்டத்தில் நாம் கலந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியிராது. தோழர். கீர்த்தி பாலசூரிய, தோழர். டேவிட் நோர்த்துக்கு 1987 ஜூன் 17ம் திகதி எழுதிய கடிதத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கு இந்தப் பிளவின் அர்த்தத்தினை மிகவும் ஆழமாக வடித்திருந்தார். அவர் எழுதியது இதுதான்: ''சரியாகச் சொன்னால், அனைத்துலகக் குழுவின் உள்ளிருந்து ஹீலி—பண்டா—சுலோற்றரை ஓட்டிக் கலைத்தும் அவர்களை மார்க்சிசத்தின் எதிரிகளாக அம்பலப்படுத்தும் முழுப் போராட்டமும் இல்லாது போயிருந்தால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகமும் இன்றைய நிலைமையில் முதலாவது கட்டத்திலேயே அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கும். அவர்களின் ட்ரொட்ஸ்கிச பூச்சாண்டிகளை சவால் செய்யாது விட்டிருந்தால், சிறப்பாக இந்தியாவினுள் கையாலாகாத்தனமான ஆளும் வர்க்கமும் இரு நாட்டினதும் குட்டி முதலாளித்துவ இயக்கங்களும் புரட்சிகர மார்க்சிஸ்டுகளை முழுமனே தனிமைப்படுத்த உதவும் வகையில் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்ய அனைத்துலகக் குழுவின் கிளைகள் வலதுசாரிப் போக்குகளால் கீழ்ப்படுத்தப்படுவது தவிர்க்கமுடியாததாகியிருக்கும். நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு பற்றிய ஹீலி—பண்டா—சுலோற்றரின் நிலைப்பாட்டினை அனைத்துலகக் குழுவின் உள்ளே அம்பலப்படுத்துவது, துணைக் கண்டத்தினுள் வர்க்கப் போராட்டத்தின் இன்றைய கொடிய வெடிப்பின் தீர்க்கதரிசனம் மட்டுமன்று அது தேசிய முதலாளிவர்க்கமும் அதன் குட்டி முதலாளித்துவ ஏஜண்டுகளும் தொழிலாளி வர்க்கத்தினைத் தம்முடன் 'தேசிய' கசாப்புக் கடைக்கு இழுத்துச் செல்ல எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் எதிராகப் போராடும் பொருட்டு இரு நாட்டினதும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதியினரைக் கோட்பாட்டு, அரசியல் ரீதியில் ஆயுதபாணியாக்குவதும் ஆகும்''

வரலாறு, வேலைத்திட்டம், அடிப்படைக் கொள்கை தொடர்பான பிரச்சினை பற்றி தோழர். கீர்த்தி கொண்டிருந்த சமரசமற்ற மனப்பாங்கு, எம் அனைவருக்கும் பிரமாண்டமான உதவேகத்தினை வழங்கியது. மத்தியவாதம், சந்தர்ப்பவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் தீர்க்கமான வரலாற்று அர்த்தத்தினை—அதாவது உலக சோசலிசப் புரட்சியின் வெற்றியும், ஆதலால் மனித இனத்தின் உயிர்வாழ்வும் எல்லாவற்றிற்கும் மேலாக இப் போராட்டத்தினுள் ட்ரொட்ஸ்கிச இயக்கம் காட்டும் ஈவிரக்கமற்ற தன்மையில் தங்கியுள்ளது என்பதை அவர் வேறு எவரைக் காட்டிலும் நன்கு ஆழமாகப் புரிந்து கொண்டிருந்தார்.

தொழிலாளர் புரட்சிக் கட்சியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது இந்தியாவினுள் ட்ரொட்ஸ்கிசக் கட்சியைக் கட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடியது. தோழர்களே, நீங்கள் 1971ல் பங்களாதேஷ் யுத்தம் பற்றிய பத்திரங்களை வாசித்திருப்பீர்கள். தொ.பு.க. தலைவர்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு அல்லது பங்களாதேஷ் எனப்படுவதற்கு நடாத்திய இந்திய இராணுவத் தலையீட்டினை ஒரு முற்போக்கு நடவடிக்கையாகத் தூக்கிப் பிடிக்கையில், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அது மேற்கு, கிழக்கு வங்காளத் தொழிலாளர்களிடையேயான ஐக்கியத்தினை தவிர்ப்பதையும், அத்தருணத்தில் வீழ்ச்சிகாணத் தொடங்கி இருந்த துணைக் கண்டத்தின் யுத்தத்தின் பின்னைய சமநிலையைப் பேணுவதையும் இலக்காகக் கொண்டு எடுக்கப்பட்ட பிற்போக்கு நடவடிக்கை என அம்பலப்படுத்தியது.

தோழர். கீர்த்தி 1960 பதுகளின் கடைப்பகுதியில் தோன்றிய நக்சலைட் இயக்கத்தினை மார்க்சிச விமர்சனத்துக்கு உள்ளாக்கியதில் இந்திய தொழிலாள வர்க்கத்துக்குச் சுயாதீனமான வர்க்க நிலைப்பாட்டினை கடைப்பிடிக்க பு.க.க. நடாத்திய போராட்டத்தினை கண்டு கொள்ள முடியும். இக்காலப் பகுதியிலேயே தோழர். கீர்த்தி ஜேவீபி பற்றிய சக்திவாய்ந்த மார்க்சிச ஆய்வினை எழுதினார்.

1985—86 பிளவு, பு.க.க. வுக்கும் சோசலிசத் தொழிலாளர் கழகத்துக்கும் இடையேயும், அவ்வாறே அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதிகளுடனும் நெருக்கமான அரசியல் உறவுகளுக்கான கதவினைத் திறந்து விட்டது.

இந்திய—இலங்கை உடன்படிக்கையை எதிர்த்தும், வடக்கு—கிழக்கில் இருந்து இந்திய ஆக்கிரமிப்பு படைகளை வெளியேற்றவும் பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் சிங்கள—தமிழ் இந்திய தொழிலாளர்களின் ஐக்கியத்துக்குப் போராடிய இந்தியாவின் ஒரே கட்சி சோசலிசத் தொழிலாளர் கழகமே.

தொழிற்சங்க அதிகாரத்துவத்துக்கு எதிராக மாற்று ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்துக்கு உறுதியாகப் போராடும் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின அங்கத்தவர்கள் தமது தொழிற் சங்கங்களின் தலைமைக் கமிட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம் சோ.தொ.க. தொழிலாளர்களிடையே தமது செல்வாக்கினைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டுள்ளதைக் காண முடியும். இந்தியாவின் பழையதும் பெரியதுமான ஆடைத் தொழிற்சாலையான பக்கிங்காம் கர்நாடக மில்லில் (பி. அன் சி,) ஸ்டாலினிச தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் ஒத்துழைப்புடன் நிர்வாகத்தின் வேட்டைக்கு உள்ளாகியுள்ள சோசலிச தொழிலாளர் கழகத்தின் தோழர். மோசஸ் கடந்த ஜூன் 19ம் திகதி தொழிற்சங்கக் கமிட்டி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சென்னை ஸ்டான்டர்ட் மோட்டார்ஸ் என்ற மற்றுமோர் பிரமாண்டமான மோட்டார் பக்டரியினுள் எமது தோழர். கைலாசம் கடந்த ஆண்டில் இருந்து இரண்டாவது தடவையாகவும் கமிட்டி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சோசலிசத் தொழிலாளர் கழகம் இப்பொழுது இரண்டு மொழிகளில்—தமிழ், வங்காளி—பத்திரிகைகளை வெளியிடுகின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வரலாற்று வேலைத்திட்டம், அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றமான பகுதியினர் அரசியல் விளக்கம் பெறவும், பயிற்சி பெறவும் எமது வரையறுக்கப்பட்ட வளங்களுடன் நாம் போராடி வருகின்றோம்.

கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் வீழ்ச்சியும் இந்நாடுகளின் அரச அமைப்புக்கள் சிதறுண்டு போனமையும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே பிரமாண்டமான குழப்பத்தினை உண்டுபண்ணியுள்ளது. தொழிலாள வர்க்கத்தின் பழைய அமைப்புக்களான தொழிற் சங்கங்களும் சமூக ஜனநாயகக் கட்சிகளும், ஸ்டாலினிசக் கட்சிகளும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிகளுக்குத் தொடுக்கப்படும் தாக்குதல்களின் எதிரில் தமது பூரண வங்குரோத்தினையும் பிற்போக்கினையும் அம்பலமாக்கியுள்ளன. இலட்சோப லட்சம் அங்கத்தவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறிக் கொண்ட கட்சிகள் இரவோடிரவாக சிதறிச் சின்னாபின்னமாகிப் போயின.

ஐக்கிய செயலக பப்லோவாதிகளின் நிலைப்பாடும் அடியோடு எதிர்ப்புரட்சியானது என்பது முழுமனே அம்பலமாகியது. தொ.பு.க. ஓடுகாலிகளுடன் 1985—86ல் ஏற்பட்ட பிளவு அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றமான பிரிவினிடையே பிளவின் அடிப்படை அரசியல், கோட்பாட்டுப் பிரச்சினைகளை அரசியல் ரீதியில் தெளிவுபடுத்துவதற்கான வல்லமையை அனைத்துலகக் குழுவுக்கு வழங்கியது.

தொ.பு.க. தலைமை எதிரி வர்க்க சக்திகளுக்கு அடிபணிந்து போயிருந்தது. இன்று இந்தச் சக்திகள் சுரண்டும் வீதத்தினை அதிகரித்து, தொழிலாளி வர்க்கத்தினை நசுக்கும் ஏகாதிபத்திய வாதிகளின் கைத்தேங்காயாகமாறியுள்ளன. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் தொழிற்சங்க, சமூக ஜனநாயக அதிகாரத்துவத்தினதும் முதலாளித்துவ தேசியவாதிகளதும் பண்பு ரீதியான பரிணாமத்தினை ஆழமாக ஆய்வு செய்த ஒரே அரசியல் கட்சி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே. அவர்களின் பண்பு ரீதியான பரிணாமத்துக்கு பின்னணியில் வெறும் கெட்ட பழக்க வழக்கங்கள் அன்றி நல்ல ஆழமாக நோக்கின், தேசிய அரச அமைப்பினை அடிப்படையாகக் கொண்ட தேசியவாத, சீர்திருத்தவாத வேலைத்திட்டம் உள்ளது.

கணனிமயமாக்கம், தொலைத் தொடர்பு, போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் புரட்சிகளுடன் இணைந்து உற்பத்தி பூகோளமயமானதும், முதலாளித்துவ உற்பத்தியின் பொருளாதார அலகாக விளங்கிய தேசிய அரச அமைப்புக்கு வரலாற்று ரீதியான நெருக்கடியை உருவாக்கி உள்ளது. உலக முதலாளித்துவத்துக்கான புதிய வாழ்க்கைக்கான மூச்சினை சிருஷ்டித்துக் கொடுத்த யுத்தத்தின் பின்னைய சமநிலையும் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள ஆழமான மாற்றங்களினால் வீழ்ச்சி கண்டுள்ளது. இந்நடைமுறையை நாம் அனைத்துலக ரீதியில் கண்டுகொள்ள முடியும்.

இந்திய முதலாளித்துவ ஆட்சியின் நெருக்கடி இந்தச் செயற்பாட்டின் ஒரு பாகமாகும். தமது வெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வாய்வீச்சுக்களினாலும் சுயபூர்த்தி வேலைத்திட்டத்தின் மூலமும் நான்கு தசாப்தங்கள் ஊடாக இந்தியாவை ஆட்சி செய்த இந்திய காங்கிரஸ் கட்சி, இன்று ராவ் தலைமையின் கீழ் ஏகாதிபத்திய நிதி அமைப்புக்கள், ட்ரஸ்டுகளின் கைக்கூலியாக முழுமனே பரிணாமம் அடைந்துள்ளது.

பிராந்தியவாத போக்குகள் இந்திய யூனியனில் இருந்து பிரிந்து செல்லும் எல்லை வரை வளர்ச்சி கண்டுள்ளது. ஒவ்வொரு பிராந்திய மாநில அரசுகளும் பன்னாட்டுக் கம்பனிகளின் முதலீடுகளை ஈர்க்கும் முகமாக ஆளுக்காள் போட்டியிட்டுக் கொண்டுள்ளன. தொழிலாளர்களை நெறிப்படுத்துவதில் தாம் எவ்வளவு நன்றாகத் தொழிற்படுகின்றோம் என்பதை ஏகாதிபத்தியவாதிகளுக்கு நிரூபிக்கும் முகமாக மாநில அரசாங்கங்கள் தொழிலாளர் போராட்டங்களுக்குத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கியுள்ளனர். தமிழ் நாட்டில் கடந்த மூன்று மாதங்களுள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கம் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆடை நெசவு தொழிலாளர்களுக்கும், கரூரில் சீனித் தொழிலாளர்களுக்கும் தூத்துக்குடியில் துறைமுகத் தொழிலாளர்களுக்கும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

1960பதுகளில் ஒரிஸ்சா துறைமுக நிர்மாண வேலைகளில் ஈடுபட்டிருந்த நூற்றுக் கணக்கான ட்ரக் வண்டிகளின் சில்லுகளால் 200 சிறுவர்களை நெரித்துக் கொன்றதை ஸ்டாலினிஸ்டுகளின் ஜனநாயக சகபாடி எனப்படும் ஒரிஸ்சா மாநில முதலமைச்சர் பிஜூ பட்நாய்க் சமீபத்தில் அம்பலப்படுத்தினார்.

தமது மாநிலத்தில் சேவை கலாச்சாரத்தையும் தொழிற்சங்க இயக்கத்தினையும் விமர்சனம் செய்து இந்தியாவில் வதிவில்லாதவர்களும் (NRI) இந்திய கைத்தொழிலாளர்களும் தம்மிடம் அநேக முறைப்பாடுகளைச் செய்து கொண்டுள்ளதாக மேற்கு வங்காள ஸ்டாலினிச முதலமைச்சர் ஜோதி பாசு ஜூன் 22ம் திகதி கல்கத்தாவில்

(16 ம் பக்கம் பார்க்கவும்)

www.padippakam.com



# தமிழ் அகதிகள் கொழும்பில் இருந்து விரட்டப்பட்டனர்



மட்டக்களப்புக்கு விரட்டப்படுவதை எதிர்த்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மூத்தோரின் போராட்டத் தலைவிதியை அக்கறையுடன் எதிர் பார்க்கு சிறுவர்கள்.

ஜூன் கடைப்பகுதியில் கொழும்பு அகதி முகாம்களில் தங்கியிருந்த தமிழ் தேசிய இனத்தினரை கிழக்கு மாகாணத்துக்கு அப்புறப்படுத்தும் இனவாதத் தாக்குதலை ஆரம்பித்ததோடு, கொழும்பு மாவட்டத்தில் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான விஜேதுங்க அரசாங்கத்தின் இனவாதத் தாக்குதல் புதிய கட்டத்தினை எட்டியுள்ளது.

இந்த அப்புறப்படுத்தல் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் 30 ஆயிரம் ஆயுதப்படையினரைக் குவித்து 'ஜனாதிபதி இடம்பெயர் சேவை'யை ஜூலை 23—24ம் திகதிகளில் நடாத்தும் யூஎன்பி அரசாங்கத் தயாரிப்புக்களுக்கு மத்தியிலேயே இடம்பெற்றுள்ளது. ஜூன் 30ம் திகதி அதிகாலை 3/30 மணிக்கு கொழும்பு விவேகானந்தா மண்டபத்தினை முற்றுகையிட்ட பொலிசும், இராணுவத்தினரும் அகதிகளைப் பலாத்காரமாக பஸ் வண்டிகளில் ஏற்றி, மட்டக்களப்புக்குக் கொண்டு சென்றனர். இந்த ஆயுதப் படை தர்பாருக்கென சிவில் உடையில் 200 பொலிசாரும் 60 இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடையே யூஎன்பி தேசிய உளவுச் சேவையின் அதிகாரிகளும் காணப்பட்டதாகத் தெரிகின்றது.

கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்தில் மட்டக்களப்பில் இனவாத யுத்தத்தினால் வீடு வாசல்களை இழந்த சுமார் 90 குடும்பங்கள் தங்கியிருந்தன, இவர்களை மட்டக்களப்புக்கு அப்புறப்படுத்தும் யூஎன்பி அரசாங்கத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தான் தாமதம் இம்மக்கள் எதிர்ப்பு இயக்கத்திலும் சத்தியாக்கிரகத்திலும் ஈடுபட்டனர். தம்மை பேரழிவுக்குள் தள்ளும் இந்தத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை இவர்கள் அடியோடு நிராகரித்தனர். அரசாங்கம் இவர்களை இராணுவ—பொலிஸ் துப்பாக்கி முனையில் மட்டக்களப்புக்கு கொண்டு சென்றுள்ளது.

இதற்கிடையே பம்பலப்பிட்டி. சரஸ்வதி மண்டபத்தில் தங்கியிருந்த சுமார் 300 அகதிகளை ஜூலை 2பக்கு முன்னர் வெளியேறிவிடும்படி யூ.என்பி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதோடு, தாமும் விவேகானந்தா மண்டப அகதிகள் முகம் கொடுத்த அவல நிலைக்கு முகம் கொடுக்க நேரிடுமோ என இவர்கள் அஞ்சிக்கொண்டுள்ளனர். இந்த அகதிகளை மாவட்ட ரீதியில் பிரித்து முதலில் மட்டக்களப்பு மாவட்ட அகதிகளை அப்புறப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. கொழும்பில் கல்வி கற்கும் அகதிகளின் இரண்டாம் தவணைப் பரீட்சை முடியும் வரையுயாகுதல் (ஆகஸ்ட்) இந்த அப்புறப்படுத்தல் நடவடிக்கையைத் தள்ளிப்போடும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் யூஎன்பி அரசாங்கம் நிராகரித்துள்ளது.

யூஎன்பி அரசாங்கத்தின் அகதிகள் முகாம்களை மூடும் திட்டத்தின்படி தமிழ் தேசிய இனத்தினர் தங்கியிருந்த பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபம், பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவில், மட்டக்குளி இந்து கலாச்சார மண்டபம் அனைத்தும் காலியாக்கப் பட வேண்டும். யுத்தச் செலவினங்களைக் குறைக்கும்படி உலக வங்கி பிறப்பித்துள்ள கட்டளையை இந்த இலட்சணத்தில் — அகதி முகாம்களை மூடி அவர்களை மரணத்தின் பிடிக்குள் தள்ளுவதன் மூலம் யூஎன்பி அரசாங்கம் அமுல் செய்கின்றது.

அகதிகளை மட்டக்களப்பில் குடியமர்த்தும் திட்டத்துக்கெனப் பயன்படுத்தப்படும்

(6ம் பக்கம் பார்க்கவும்)

# சோசலிச அனைத்துலகவாதத்தை பிரகாச...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் பங்கு கொள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவினதும் ஜேர்மன் கிளையான புன்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரினதும் (பீ. எஸ். ஏ.) சார்பில் அதன் தேசியச் செயலாளர் உல்ரிச் ரிபேர்ட் வாழ்த்துத் தெரிவிக்க வருகை தந்திருந்தார். இந்திய ட்ரொட்ஸ்கிச சோசலிச தொழிலாளர் கழகத்தின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்க அதன் செயலாளர் அருண்குமார் விஜயம் செய்திருந்தார். அவருடன் இந்திய ட்ரொட்ஸ்கிச 'தொழிலாளர் பாதை' பத்திரிகை ஆசிரியர் என். ராமும் விழாவில் கலந்து கொண்டார். அனைத்துலகக் குழுவுடன் அரசியல் ஐக்கியம் கொண்ட அமெரிக்க வேர்க்கஸ் லீக்கின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த், அனைத்துலக குழுவின் அவுஸ்திரேலிய கிளையின் தேசிய செயலாளர் நிக் பீம்ஸ், பிரித்தானிய கிளை செயலாளர் டேவ் ஹைலன்ட், அரசியல் வேட்டையினால் இடம்பெயர்ந்துள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர் கிளையின் சார்பில் கே.ஆர். நேசன் ஆகியோர் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் போராட்டத்தை நினைவு கூரும் விதத்தில் விழாவுக்கு நல்வாழ்த்து செய்திகளை அனுப்பியிருந்தனர். அந்த வாழ்த்துச் செய்திகளை பு.க.க. பொதுச் செயலாளர் விஜே டயஸ் கூட்டத்தில் வாசித்தார்.

விழாக் கூட்டத்தில் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் வந்திருந்த முன்னேறிய தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்டோரும், இளைஞர்களும் சுமார் 300 பேர் கலந்து கொண்டனர் பு.க.க.வின் 25வது ஆண்டு நிறைவு வரலாற்றைச் சித்தரிக்கும் கண்காட்சியைக் காண 50க்கு மேற்பட்டோர் வருகை தந்திருந்தனர். யாழ்குடா நாட்டில் இருந்து தொழிலாள, இளைஞர் பேராளர் குழு இக் கூட்டத்தில் கலந்து கொண்டது சிறப்பம்சமாக விழங்கியது. விடுதலைப் புலிகளதும் இலங்கைப் படைகளதும் அடக்கு முறைகளுக்கு மத்தியில் ஆறு நாள் பயணம் செய்து, பெரும் சிரமத்துக்கு மத்தியில் இவர்கள் விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தனர். சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர், யுவதிகள், இளைஞர் குழுவினரும் இவ்விழாக் கூட்டத்தில் பங்கு கொண்டனர். தோட்டத் தொழிலாளர், ஆசிரியர், தொழில் நுட்பவியலாளர். பல்கலைக் கழக, பாடசாலை மாணவர், வேலையற்ற இளைஞர்கள் என்ற பல்வேறு சமூகத் தட்டினரும் இக்கூட்டத்தில் கலந்து சிறப்பித்தனர்.

நான்காம் அகிலத்தை கட்டியெழுப்பிய லியோன் ட்ரொட்ஸ்கி, அவருடன் இணைந்து போராடிய தோழர்கள். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக ஸ்தாபகரும் முன்னாள் பொதுச் செயலாளருமான காலஞ்சென்ற தோழர். கீர்த்தி பாலசூரிய, கழகத்தை ஸ்தாபிக்க உழைத்த ஏனைய தோழர்களான வில்பிரட் பெரேரா. (ஸ்பைக்). கூட்டரசாங்க, யூஎன்பி அரசாங்க, ஜேவீபி பாசிஸ்டுகளால் கொலையுண்ட பு.க.க. உறுப்பினர்களான லக்ஷ்மன் வீரக்கோன், எல். ஜி குணதாச, ஆர். பி. பியதாச, ஆர்.ஏ. பிட்டவெல, பீ. டபிள்யூ. குணபால, கிரேசன் கீகியனகே, போன்ற தோழர்களை நினைவு கூர்வதோடு கூட்டம் ஆரம்பமாகியது. சகல பேச்சாளர்களும் இரு தசாப்தங்களுக்கு மேல் பு.க.க. பொதுச் செயலாளராக விளங்கி மறைந்த தோழர் கீர்த்தி பாலசூரிய அனைத்துலக ட்ரொட்ஸ்கிஸ்ட்டாக ஆற்றிய போராட்டத்தை நினைவு கூர்ந்தனர்.

## கண்காட்சி

பு. க. க. வின் 5 இலட்சம் சிறப்பு நிதியின் அன்றைய மிகுதியை (ரூபா. 50.000/-) திரட்ட விடுக்கப்பட்ட அழைப்புக்கு ரூபா. 68,000/- திரட்டித்தர கூட்டத்தினர் வாக்குறுதி அளித்தனர். இரண்டு கிழமைகளில் இந்த இலக்கினை எட்ட வாக்குறுதி தந்த கூட்டத்தினர் உடனடியாக ரூபா. 1780/- திரட்டித் தந்தனர். இதுவோர் மறக்க முடியாத வரலாற்று நிகழ்ச்சி. கால் நூற்றாண்டு நிறைவையொட்டி பு.க.க. தமிழ், சிங்கள மொழிகளில் அன்றைய தினம் நான்கு புதிய மார்க்சிச நூல்களை வெளியிட்டிருந்தது.

அன்றைய கண்காட்சி பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் உலக சோசலிசப் புரட்சியின் செயற்பாட்டிற்காக பு.க.க. நடாத்திய போராட்டத்தைச் சுட்டிக் காட்டியது. ட்ரொட்ஸ்கிசத்தின் தொடர்ச்சியைப் பேண பப்லோவாத சந்தர்ப்பவாதத்தில் இருந்து விலகி, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஸ்தாபிதம், 1964ல் ல. ச. ச. கட்சியின் பெரும் காட்டிக் கொடுப்பினால் உச்சக் கட்டம் அடைந்த பப்லோவாதத்துக்கு எதிராக அனைத்துலக குழு நடாத்திய போராட்டம், அதிலிருந்து பு.க.க உதயம், பு.க.க. அனைத்துலக ரீதியிலும் இலங்கையின் உள்ளும் நடத்திய போராட்டத்தின் சகல முக்கிய நிகழ்வுகளும் கட்டங்களும் பழம் பிரசுரங்கள், தினத்தாள்கள், கட்டுரைகள், புகைப்பட உருவில் கண்காட்சியில் இடம் பிடித்தன. பு.க.க. முக்கிய உறுப்பினர்கள் இவ்வரலாற்றை பார்வையாளர்களுக்கு விளக்கினர்.

அனைத்துலகக் குழுவினதும் பீ. எஸ், ஏ. சார்பிலும் வாழ்த்துச் செய்தி வழங்கிய உல்ரிச் ரிபர்ட் பின்வருமாறு குறிப்பிட்டார்; ''கடந்த கால் நூற்றாண்டில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெற்ற முக்கிய வரலாற்று வெற்றி, இலங்கைக்குள் மட்டுமல்ல முழு இந்திய துணைக்கண்டத்திலும் வெடித்தெழும் பாரிய முக்கிய வர்க்க போராட்டங்களை வெற்றிக்கு இட்டுச் செல்லக் கூடிய உறுதியான அரசியல் அடிப்படையைக் கட்டியெழுப்பியதே. வேறு வார்த்தையில் சொன்னால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தை மிக ஆழமாக அரசியல் ரீதியில் மீண்டும் படிப்பினையூட்டும் அடிப்படையை ஸ்தாபித்துள்ளது. (உல்ரிச் ரிபட்டின் முழு உரையும் இவ்விதழின் நடுப்பகுதியில் பிரசுரமாகியுள்ளது.)

''1985—86ல் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளுக்கு எதிராக, அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதியினருடன் இணைந்து நின்று பு. க. க. தொடுத்த போராட்டம் இன்றேல் நாம் இவ்விடத்துக்கு வந்திருப்போமா என்பதற்கு எதுவிதமான உத்தரவாதமும் இல்லை''. என இந்திய சோசலிசத்தொழிலாளர்கழக பொதுச் செயலாளர் தோழர், அருண்குமார் குறிப்பிட்டார். இலங்கை, இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர் மட்டுமன்றி, குட்டி முதலாளித்துவ தலைமைகள் தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களை இனவாத சேற்றுக்குள் இழுத்துச் செல்லும் நிலையில் அதற்கு எதிரான தலைமையை வழங்குவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவேயாகும்' எனவும் அருண் மேலும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பேசிய பு.க.க பொதுச் செயலாளர் விஜே டயஸ் பின்வருமாறு குறிப்பிட்டார். ''எமது வேலைத் திட்டம் உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டமே. எமது இலக்கு உலக சோசலிச ஐக்கிய குடியரசே, இந்நிலையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், நாம் கட்டியெழுப்பும் அனைத்தும் இலங்கைக்கு மட்டுமன்றி உலகப் புரட்சியின் பொருட்டேயாகும் என்பதை வலியுறுத்துகின்றது.

''உலகம் பூராவும் உள்ள எமது சக சிந்தனையாளர்களுடன் 25 ஆண்டு கால எமது படிப்பினைகளை கூட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்டத்திலும் ஆசியாவிலும் சோசலிசப் புரட்சிக்கு அவசியமான புரட்சிகரத் தலைமைக்கு கல்வியூட்டிப் பயிற்சியளிப்பதில் ஈடுபட வேண்டும்' என்றார்.

(16ம் பக்கம் பார்க்கவும்)

படிப்பகம்

www.padippakam.com



# விஜேதுங்க அரசாங்க இனவாத ஒடுக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் படுகொடூரமான யுத்தத் தாக்குதல்களில் — கிழக்கு மாகாணத்தில் — இறங்கி புதிய இனவாத ஆத்திரமூட்டல்களுக்குத் தயாராகிக் கொண்டுள்ள ஒரு நிலையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை, அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்கு நுழைந்துகொள்ளத் துடிக்கின்றது. கடந்த சில தினங்களாக கிழக்கு மாகாணத்தில் 'கடற் சூறாவளி' என்ற பேரில் நடாத்திய யுத்த நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் பொது மக்களும் சுமார் நூறு பேர் கொல்லப்பட்டதோடு, ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம் பெயர நேரிட்டது.

'கடற் சூறாவளி'யின் பின்னணியில், வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணத்தினை இணைப்பதற்குச் சம்மதத்தினைக் கண்டறியும் கருத்துக் கணிப்பினை நடாத்த யூஎன்பி அரசாங்கம் தயாராகி வருகின்றது. அரசாங்கத்தின் எடுபிடியான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானத்தினை அமுல் செய்வதாகக் கூறியே இதனை நடாத்தவுள்ளது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் முன்னர் போன்று 'பதில் தாக்குதலில்' ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் விஜேதுங்க அரசாங்கத்தின் யுத்த வீரியம் அன்று; மாறாக விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு விடுத்துள்ள ஒரு சமிக்கையாக இது தென்படுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாச, ஜ ஜ தே.மு. தலைவர் லலித் அத்துலதமுதலி கொலைகளின் பின்னர், அரசாங்கம் தெற்கில் — சிறப்பாக கொழும்பில்— தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான பயங்கர வேட்டையை முடுக்கிவிட்டுள்ளது. தேடுதல்களிலும், சுற்றிவளைப்புகளிலும் ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டனர். இந்தப் பயங்கரம் தொடர்கிறது. பொலிஸ் நிலையங்களில் கைதானோருக்கு எதிரான சித்திரவதைகளும் இடம்பெற்றுள்ளன.

அரசங்காத்தின் கூலிப்படை இயக்கங்களான தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, ஈபிஆர்எல்எப், புளட், என்பன 'விடுதலைப் புலிகள்' அங்கத்தினரைத் தேடிக் கண்டு பிடிக்க உசிதமான ஒரு முறையை கையாளவும்' என அறிக்கை விடுக்கும் அளவுக்கு இந்தப் பயங்கரம் உக்கிரம் கண்டுள்ளது. தோட்டத்துறையைச் சேர்ந்த 2000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்த ஒடுக்கு முறையின் பங்காளியான இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பாராளுமன்றத்தில் முதலைக் கண்ணீர் வடித்துள்ளார். கைது செய்யப்பட்டோர் சித்திரவதைக்குள்ளானதோடு மட்டுமன்றி, நூற்றுக்கணக்கானோர், விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தடை உத்தரவு

இதற்கிடையே அரசாங்கம் வட—கிழ் மாகாண தமிழ் மக்களுக்கு தென் மாகாணங்களை—சிறப்பாக கொழும்பு மாவட்டத்தை—தடைசெய்யப்பட்ட பிராந்தியமாக்கும் நிலைமைகளைத் தயார் செய்வதில் ஈடுபட்டுள்ளது. இதன்படி தமிழர்கள் கொழும்புக்கு விஜயம் செய்ய 'போதிய' காரணம் இருக்க வேண்டும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டுகள், தொலைபேசி அழைப்புக்களின் பேரில் கொழும்பு வருவோர் இனி வவுனியாவுடன் நின்று கொள்ள வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து உயிர் தப்ப கொழும்புக்கு வந்துள்ள அகதிகளை உடன் திரும்பிச் செல்லுமாறு அரசாங்கம் விடுத்துள்ள அறிவித்தல் இதன் ஒரு பாகமே,

இத்தகைய இனவாத தாக்குதல்களை உக்கிரமாக்கியுள்ள விஜேதுங்க அரசாங்கத்துடனேயே விடுதலைப் புலிகள் 'சமாதான' பேச்சுவார்த்தைகளுக்கு ஆயத்தமாகின்றனர். கடந்த சில வருடங்களாக விடுதலைப் புலிகள் 'சமாதானத்தை' ஏற்படுத்தும் பேரில் ஏகாதிபத்திய வாதிகளின் தலையீடுக்கும் முயற்சி செய்தனர். இந்திய ஆட்சியாளர்கள், அமரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை உருவாக்கிக் கொண்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களில் ஒருவரான கிட்டுபயணம் செய்த கப்பல் இந்தியக் கடற்படையினரால் நடுக்கடலில் சிதறடிக்கப்பட்டது தெரிந்ததே. கிட்டு சில மேற்கத்தைய நாடுகளின் ஆட்சியாளர்களது 'சமாதான தீர்வு' களுடன் இக்கப்பலில் வந்த போதே கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் விஜேதுங்க அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்குச் செய்யும் முயற்சிகளும் கூட இந்த மையாலாகாத் தனமானதும், பிற்போக்கானதுமான ஏகாதிபத்திய வேலைத்திட்டத்தின் ஒரு பாகமே.

பழைய யூகோசலாவியாவைத் துண்டாடி அமைக்கப்பட்ட அரசுகளின் உள்ளும், பொஸ்னியாவின் உள்ளும் போரிட்டு வரும் தேசியவாதக் கும்பல்கள் ஏகாதிபத்திய கோஷ்டிகளுடன் இணைந்து கொண்டுள்ளதைப் போலவே விடுதலைப் புலிகள் தலைமையும் ஏகாதிபத்திய முகாம்களுடன் கூட்டுச் சேர அணிதிரள்கின்றது. அதே சமயத்தில் அவர்கள் விஜேதுங்கவுக்கும் கைநீட்டுகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் கூறிக் கொள்வது போல் அவர்கள் 'தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி' அல்ல. அது தொடர்ந்தும், எந்த விதத்திலும் தமிழ் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பும் அல்ல. விடுதலைப் புலிகள் இயக்கம், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அமைப்பாக நாற்றம் எடுத்துள்ளது. விஜேதுங்க அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் செய்து கொள்ளும் கொடுக்கல் வாங்கல்கள் வட—கிழ் மாகாணத் தமிழ் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்தியச் சார்பு ஒடுக்குமுறையாளரின் ஒடுக்கு முறைக்கு ஆளாக்கி, தமக்கு எலும்புத் துண்டு தேடிக் கொள்ளும் ஒரு முயற்சியாகும். அத்தகைய ஒரு முயற்சி தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் திரும்பவும் படுமோசமான இரத்தக் களரிக்குப் பலியிடுவதற்கான கதவுகளை அகலத் திறப்பதாக விளங்கும். அவ்வாறே விடுதலைப் புலிகள் அமைத்துக் சொள்ளும் 'தனி நாடு' இத்தகைய இரத்தக் களரியை இப்பிராந்தியத்தில் சிருஷ்டிக்கின்றதும் ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக மாறுகின்றதுமான ஒரு தலைவிதியைக் கொண்டுள்ளது.

இத்தகைய படுமோசமான இனவாத மக்கட்படுகொலை யுத்தத்தினை நடாத்திக் கொண்டே யூஎன்பி அரசாங்கம் 'சமாதானம்' பற்றி அக்கறை கொண்டுள்ளதாக கூறிக்கொள்கின்றது. பொலிஸ் படையினரை விடுதலை செய்வதற்குப் பதிலீடாக தடை செய்யப்பட்ட பொருட்களில் சிலவற்றை வடக்கே அனுப்ப அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பாக ஜனாதிபதி விஜேதுங்கவுக்குத் திடீரென பிறந்த கருணையினால் உருவானது அல்ல.

## ஏகாதிபத்திய முடிவு

முழுத் தீவினையும் ஏகாதிபத்திய ஏகபோகங்களின் ஆளுமைக்கு உள்ளாக்க விஜேதுங்க அரசாங்கம் புதிய அரசியல் உபாயங்களை ஆராய்ந்து வருகின்றது. பிரேமதாச அரசாங்கம் நடைமுறைப் படுத்திய மிலேச்சத் தாக்குதல்களையும் தாண்டும் வகையிலான ஒரு தொகை காட்டுமிராண்டித் தாக்குதல்களை விஜேதுங்க அரசாங்கம் ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையின் பேரில் ஆரம்பித்துள்ளது. ஜூன் 19ம் திகதி ஏகாதிபத்திய வாதிகளின் 'உதவி வழங்கும் குழு'வின் கூட்டத்தில் ஏகாதிபத்திய வாதிகள் இவ்விடயத்தையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர், உழைப்பினைக் கொள்ளை இலாபத்துக்கு விற்றுத் தள்ள விஜேதுங்க அரசாங்கம் ஏனைய ஆசிய நாடுகளின் முதலாளிகளுடன் போட்டியிட்டு வருகின்றது.

இந்நிலையிலேயே வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களை ஈவிரக்கமின்றி நசுக்கித் தள்ளும் இராணுவ சர்வாதிகாரத்துக்குக் கீழ்ப்படுத்துவது ஆளும் வர்க்கத்துக்கு அவசியமாகின்றது. விடுதலை புலிகளின் தலைவர்களுடனான அரசியல் கொடுக்கல் வாங்கல்களில் விஜேதுங்க இதற்காகவே பந்தயம் பிடிக்கின்றார்.

பாரிசில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் இந்தியா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பத்திரிகையாளரான வெங்கட் நாராயணனுக்கு ஜூன் 23ம் திகதி வழங்கிய பேட்டியில் 'நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு' பிரபாகரனுக்கு அழைப்பு விடுப்பதாகக் கூறியுள்ளார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் வட—கிழக்கு மாகாண ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவிதமான சமாதானமும் கிட்டாது. இக் கொடுக்கல் வாங்கல்கள் ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களைப் பூர்த்தி செய்யவும் தமது வர்க்க ஆட்சியைக் காத்துக் கொள்ளவும் முதலாளித்துவ அரசாங்கங்களும், முதலாளித்துவக் கும்பல்களும் கையாளும் தந்திரங்களே. ஏகாதிபத்தியாவதிகளின் கட்டளைகளை அமுல் செய்யும் பொருட்டு தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தி ஒடுக்க இலங்கை முதலாளித்துவ அரசாங்கம் கையாண்டு வரும் முக்கிய ஆயுதம் இனவாத யுத்தமாகும். சமரசம் எனப்படுவது அடுத்த இரத்தக் களரிக்கான தயாரிப்பு நடவடிக்கையாகும். யூ. என்.பி. அரசாங்கத்துக்கும் அது பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை முதலாளி வர்க்கத்துக்கும் உள்ள ஒரே வேலைத்திட்டம்: வடக்கிலும், தெற்கிலும் உள்ள சிங்கள—தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் பகற்கொள்ளைக்கு விற்றுத் தள்ளுவதே.

உலகச் சந்தைக்காக மோதிக்கொள்ளும் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள், அரைக் காலனித்துவ நாடுகளில் இன, மதப் பிளவுகளைத் தூண்டிவிட்டு தமது இராணுவத் தலையீட்டுக்கு வழிகோல வெளிவெளியாகவும் மறைமுகமாகவும் தொழிற்பட்டு வருகின்றனர்; இலங்கையிலும் இந்தியாவிலும் ஏகாதிபத்தியவாதிகள் இனவாத மோதுதல்களில் கை போட்டுக் கொண்டுள்ளனர். இந்தியாவும் இலங்கையும் ஏகாதிபத்தியவாதிகள் எதிர்கால தலையீட்டுக்காகக் கண் வைத்துக் கொண்டுள்ள இரு நாடுகளாகும். அத்தகைய இராணுவத் தலையீடுகளில் ஏகாதிபத்தியவாதிகள் தம் முன்னால் வயிறளக்கும் விஜேதுங்க அரசாங்கம், விடுதலைப் புலிகள், பற்றும் முதலாளித்துவக் கும்பல்களை அணிதிரட்டிக் கொள்ளும்.

சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ கட்சிகளின் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளினதும வேலைத் திட்டங்களின் பங்காளிகளாகியுள்ளனர். வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் பொதுமக்களைக் குழப்பியடிக்கத் தம்மால் ஆனதையெல்லாம் இத்தலைவர்கள் செய்கின்றார்கள். 1987 இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கும், இராணுவ ஆக்கிரமிப்புக்கும் ஆதரவளித்த இவர்கள், 1990ல் பிரேமதாச அரசாங்கம் புதிய மட்டத்தில் ஆரம்பித்த இனவாத யுத்தத்துக்கு முழு ஆதரவு வழங்கினர், இன்று யூ. என்.பி. அரசாங்கத்தின் கைத்தேங்காயாகச் செயற்படும் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகளாக சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் செயற்படுகின்றனர்.

வடக்குக்—கிழக்கு மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காப்பதும் இனவாத யுத்தத்தினை நிறுத்துவதும் ஏகாதிபத்திய இராணுவத் தலையீடுகளைத் தவிர்ப்பதுடனும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளிடம் இருந்து பாதுகாப்புப் பெறுவதுடனும் இணைந்து, தொழிலாள— ஒடுக்கப்படும் மக்கள் முன் நிலையில் தோன்றியுள்ளது. தேசிய முதலாளிகள் எனப்படுவோர் நிதி மூலதனத்துடன் நெருக்கமாக இணைந்த சொம்பிரதோர்களாகி உள்ளனர்.

## இனவாத யுத்தத்தில் இருந்து விடுபட ஒரே வழி

ஏகாதிபத்தியத்துக்கும் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜன்சிகளுக்கும் எதிராக அனைத்துலகத் தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து நடாத்தும் போராட்டத்தின் மூலமே தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் இனவாத யுத்தத்தில் இருந்து மீட்சி பெறமுடியும் என்பது தீவின் கடந்த 10 ஆண்டுகால இனவாத யுத்தத்தின் இரத்தம் தோய்ந்த படிப்பினையாகும். அவ்வாறே தென் மாகாணங்களின் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இனவாத யுத்தத்தினை எதிர்த்து வடக்கு—கிழக்கு தொழிலாளர்களுடன் ஒன்றிணைந்து அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினைக் கட்டியெழுப்புவதன் மூலமே யூஎன்பி. தாக்குதலுக்கு எதிராகப் போராட முடியும் என்பது இந்தப் 10 ஆண்டு காலப் படிப்பினையாகும்.

இந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளின் பிற்போக்கு கொடுக்கல் வாங்கல்களுக்கும் விஜேதுங்க அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கும் எதிராக வடக்கு—கிழக்கு—தெற்கு மாகாணங்களில் தொழிலாளர்கள்

(16ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# இந்தியாவுக்கு உதவி வழங்கும் குழு' துரித தாக்குதலுக்கு உத்தரவு

இந்தியாவின் குரல்வளையை நெரிக்கும் ஏகாதிபத்திய நடவடிக்கை இறுக்கமடைந்து வரும் நிலையில் நரசிம்மராவ் அரசாங்கத்தின் அரசியல் நெருக்கடி மேன்மேலும் உக்கிரமடைய ஆரம்பித்துள்ளது.


இந்தியாவுக்கு உதவி வழங்கும் குழு எனப்பட்டதன் கூட்டம் ஜூலை 2ம் திகதி பாரிசில் கூடியது. இந்தியாவினுள் தமது சரண்டலை நிலைநாட்ட ஏகாதிபத்தியம் அமைத்த இக் குழு, இம்முறை வழமைக்கு மாறாக எதிர்பார்த்ததை விட 20 கோடி டாலர் கூடுதலாக—740 கோடி டாலர்களை உதவியாக வழங்க தீர்மானித்துள்ளதென ராவ் அரசாங்கமும், முதலாளித்துவப் பத்திரிகைகளும் ஆர்ப்பரிக்கின்றன.

இந்த உதவி எனப்படுவது 1992 இறுதியில் இருந்த 7000 கோடி டாலர் கடன் மலையை மேலும் 740 கோடி டாலர்களால் அதிகரிக்கச் செய்துள்ளது. அக் கடன் பளு முழுவதும் பொதுமக்களின் முதுகெலும்பை உடைக்கும் ஒன்றாகும். அத்தோடு இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் தேசியப் பொருளாதாரம் என்பதை துடைத்துக் கட்டி, ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சுரண்டலை நிலைநாட்டும் வேலைத் திட்டத்தை துரிதப்படுத்த பொதுமக்களின் தொழில், வாழ்க்கைத் தரம், நலன்புரி சேவை அனைத்தையும் ஒழித்துக் கட்டும் புதிய கட்டளைகள் 740 கோடி டாலர்களுடன் ராவ் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது,

இதுவரை ராவ் அரசாங்கம் அமுல் செய்த சீர்திருத்தத் திட்டத்தை புகழ்ந்து ''மகிழ்ச்சி'' தெரிவித்த ஏகாதிபத்திய வங்கியாளர், இந்த உதவியுடன் ''இந்திய அரசாங்கம் கையாண்டு வரும் சவால் நிறைந்த சீர்திருத்த நிகழ்ச்சி நிரலின வெற்றியின் முழுமுனைநோக்கினையும் உத்தரவாதம் செய்ய உதவும் வகையில் துரிதமானதும் தீர்க்கமானதுமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய துறைகள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளதாக'' ஹிந்து பத்திரிகை குறிப்பிட்டது.

1996 – 97ல் நடைமுறைப் படுத்தி முடிக்கவுள்ள ஏகாதிபத்திய வேலைத் திட்டம் ஒலைறை 'செல்லையா குழு தீர்மானம்' என்ற பெயரில அரசாங்கம் ஜூலை 9ல் வெளியிட்டது, அதில் ஓரம்சம், சுங்கவரி தீர்வையை நூற்றுக்கு 25%க்கு மேற்படாமல் வெட்டுவதாகும். இதனை ''மேற்கத்தைய நாடுகளின் சுங்கவரி தீர்வைக்கு ஒப்பானது'' என விதந்துரைத்தாலும், உண்மை நோக்கம் அதுவல்ல. ஏகாதிபத்திய உற்பத்திகளால் இந்தியச் சந்தையை நிரப்புவதற்கான நிலைமையைச் சிருஷ்டிப்பதே உண்மை நோக்கம்,

நடைமுறைக்கிடும் மற்றைய தீர்மானம் என்னவெனில், 1993/94ல் மொத்தத் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 7 வீதத்துக்குக் குறைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையை மேலும் வெட்டுவதாகும்,



கல்கத்தாவில நடைபெற்ற ஸ்டாலினிச (மார்க்சிஸ்ட) கம்யூனிஸ்ட கட்சியின் மாநாட்டில் இந்திய பிரதமர் நரசிம்மராவுடன் கட்சித் தலைவரும் மேற்கு வங்காள முதலமைச்சருமான ஜோதிபாசு உரையாடுகின்றார்.

அதாவது 1996 —97ல் மாநில அரசுகளின் பற்றாக் குறையை நூற்றுக்கு 5% ஆகவும், மத்திய அரசாங்கத்தின் பற்றாக்குறையை நூற்றுக்கு 3% ஆகவும் வெட்டுவதாகும். நலன்புரி சேவை வெட்டு, விலைக் கட்டுப்பாட்டு முறையை அகற்றுதல், அரச துறைக்கான உதவித் தொகையை அகற்றுதல், அரச துறைக்கு மூடுவிழா என்பவற்றை அமுல்படுத்த வேண்டுமென்றே செல்லையா குழு இங்கு குறிப்பிடுகின்றது. தொழிலாள, ஒடுக்கப்பட்ட மக்களின் மேல் பாரிய அழிவினைச் சுமத்தும் இந்த தாக்குதலை ''திடசங்கற்பத்துடன் நடைமுறைக்கிட வேண்டும்'' என முதலாளிகள் கூறுகின்றனர். ஹிந்து பத்திரிகை அதன் ஜூலை 6ம் திகதிய ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''எவ்வாறாயினும் 1996 – 97 ஆண்டளவில் மத்திய, மாநில அரசுகளின வரவு-செலவு திட்டப் பற்றாக் குறையை 3% அளவில் விளங்குமாறு குறைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதை செயற்படுத்துவது பெரும் சிரமமாகும. நலன்புரி சேவை, விலைக்கட்டுப்பாட்டு என்பன தொடர்பாக வெறுப்புக்கிடமான முடிவெடுக்க நேரும். அத்தோடு மத்திய அரசாங்கம பொருளாதாரச் சீர்திருத்தம் பூகோளமயமாக்கும் பற்றிய தமது கருத்துக்கு மாநில அரசுகளை இணைத்துக் கொள்ளவும, அதற்கு இணங்கச் செயற்பட அவற்றைத் தூண்டவும் நேரிடும்.''

செல்லையா குழு சிபார்சு செய்யும் மற்றுமொரு தீர்மானம் ஏகாதிபத்தியம் ஏற்கனவே நிர்ப்பந்தித்துள்ள ''கைத்தொழில் பிரச்சினை மசோதாவை''த் திருத்துவதாகும். நோய் பிடித்த கம்பனிகளை மூடி, தொழிலாளரை வெளியேற்ற அரசாங்கத்தின் முன் அனுமதி தேவை என்ற சட்ட விதியை அகற்றிவிடுமாறு ஏகாதிபத்தியம் கோருகிறது, 'வேலைநீக்க விதிமுறை' என்ற பெயரில் அரசாங்கம் வெளியிட்டுள்ள மசோதாவை அப்படியே நிறைவேற்றி அமுல் செய்ய உள்ளது,

உதவி வழங்கும் குழுக் கூட்டத்திற்கு இரு தினங்களுக்கு முன்னர் கல்கத்தாவில் ஸ்டாலினிஸ்ட்டுகள் கூட்டிய மகாநாட்டில் கலந்து கொண்ட ராவ், ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளையை ஒன்றும் தவறாமல் செயற்படுத்த உள்ளதாக அறிவித்தார். ''தனியார் துறையை ஊக்குவிக்க நாம் புதிய கைத்தொழில், வர்த்தக, நாணய கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்,'' என ராவ் தெரிவித்துள்ளார்,

நரசிம்மராவ் அரசாங்கத்தினை பேருக்கு விமர்சனம் செய்து கொண்ட போதிலும், ராவ் அரசாங்கத்தினை ஆட்சியில வைத்திருக்க தமது வாக்குக்களையும், தொழிற்சங்கங்களையும பாவித்து வரும் ஸ்டாலினிச இந்திய (மார்க்சிச) கம்யூனிஸ்ட கட்சியின் தலைவரும மேற்கு வங்காள முதல் அமைச்சருமான ஜோதிபாசுவும இம்மகாநாட்டில் பங்கு கொண்டார், பொருளாதாரத்தின முக்கிய துறைகளில் முதலீடு செய்ய தனியார் துறை 'உற்சாகமின்றி' உள்ளது என்பதே ஸ்டாலினிச தலைவரின முக்கிய வாதமாக விளங்கியது.

உலகச் சந்தைப்பங்குபோட்டியில் வெட்டுக் குத்து நடாத்தும் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம், இந்தியாவில் பாய்ச்சல் நடாத்த எடுத்துள்ள முயற்சி இந்திய முதலாளித்துவ வர்க்க நெருக்கடியை தீவிரப்படுத்தியுளளது. ராவ் அரசாங்கம், ஏகாதிபத்திய ஆணையை செயல்படுத்துவதாக உறுதிக்கு மேல் உறுதி வழங்கி வரும் சமயத்தில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அடக்க காங்கிரஸ் அரசாங்கத்தைக் காட்டிலும் தாம் சிறந்த விதத்தில் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யத் தகுதியுடையோர் என நிரூபிக்கும முகமாக பாரதிய ஜனதா கட்சி இனவாதத்தை தூண்டி, பாசிச சக்திகளை அணிதிரட்ட முன் பாய்ந்துள்ளது.

பம்பாய் பங்கு முதல் சந்தை ஊழலின் பெரும் புள்ளியான ஹர்ஷாத் மேத்தா, அரசாங்க பாதுகாப்பு பெற நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபா லஞ்சம் வழங்கியதாக அறிவித்தமை, ஆளும் வர்க்க அரசியல் இழுபறிகளின் ஆயுதம் ஆகியுள்ளது. காங்கிரஸ் கட்சி, ராவ் பரிசுத்தமானவர் எனத் தெரிவித்த அதே சமயம் பாரதிய ஜனதா கட்சி அரசாங்கத்தை ராஜினாமா செய்யவைக்க இந்த ஊழல் குற்றச்சாட்டை பயன்படுத்துகின்றது.

ஏகாதிபத்தியத்தின் கொடிய சட்டளைகளுடன் அதை செயற்படுத்த ஆளும் வர்க்கம் நடாத்தும் மசிர்ப்புரட்சி தயாரிப்புக்களும் இந்திய ஏகாதிபத்திய பாணி முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசி சோசலிச அடிப்படையில் இந்தியத் தொழிலாள— ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை பேணும் வேலைத் திட்டத்துக்கு போராட வேண்டிய தன் அவசியத்தை புலப்படுத்துகின்றது. முதலாளித்துவ வர்க்கத்தின் ஏகாதிபத்திய பூகோளமயமாக்கல்கள் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியத் தொழிலாள வர்க்கம் உலகத் தொழிலாள வர்க்கத்துடன் இணைந்து ஏகாதிபத்தியத்தை தூக்கிவீசும் உலக சோசலிச வேலைத் திட்டத்துக்கு போராட வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தின் சோசலிசக் குடியரசுக்கான போராட்டம், இந்த வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்தியாவின சோசலிசத் தொழிலாளர் கழகமும் இவ்வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே போராடுகின்றன.

## தமிழ் அகதிகள் கொழும்பில் இருந்து..

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசம் பொதுவில் மனித சஞ்சாரம் அரிதான பிராந்தியமாகும். அவர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கமும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் பிரச்சாரம் செய்துகொள்ளும் கொட்டில்கள், நிலத்துக்குச் சீமெந்து தன்னும் இடப்படாதவை.

இந்த அகதிகள் நிவாரண வெட்டு நடவடிக்கைகளை மட்டக்களப்பு. மாவட்டத்துக்கு வெளியே வசித்து வந்த அகதிகளை மட்டுமன்றி இந்த மாவட்டத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்து இருந்தவர்களையும் பாதித்துள்ளது. பனங்காட்டு அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த மக்களை கண்ணகி புரத்தில் 'குடியமர்த்தும்' வேலைகள் இடம்பெறுகின்றன. இதன்படி கண்ணகி புரத்தில் 447 குடும்பங்களை சேர்ந்த 1812 பேரும் குடியமர்த்தப் படுகின்றனர். யூஎன்பி அரசாங்கத்தின் மீளக் குடியமர்த்தல் திட்டத்தின் மோசடியை நிரப்பும் வகையில் ஜேர்மன் ஏகாதிபத்திய அரசாங்கமும் இதில் கைபோட்டுக் கொண்டுள்ளது. இலங்கையில் உள்ள ஜேர்மன் தலைவர் கலாநிதி குலோபல் இத்திட்டத்தினை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். சமீபத்தில் ஜேர்மன் அரசாங்கம் அரசியல் அகதிகள் சம்பந்தமான சரத்துக்களை இறுக்கமாக்கியதைத் தொடர்ந்து அகதிகளை நாடுகடத்த எடுத்து வரும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவே இத் தலையீடுகள் இடம்பெறுகின்றன.

இந்த அகதிகள் குரல்வளை நெரிப்புத் திட்டத்தில் தமிழ் நாடு அதிமுக ஜெயலலிதா அரசாங்கமும் சேர்ந்து கொண்டுள்ளது. இந்தியாவில் எஞ்சியுள்ள சுமார் 80000 அகதிகளை திருப்பி அனுப்ப காங்கிரஸ் மத்திய அரசாங்கத்துடன் சேர்ந்து மாநில அரசாங்கள் செயற்பட்டு வருகின்றன. அனாதைகளுடன் சேர்ந்து இந்தியாவினுள் ஊடுருவிக் கொண்ட முதலாளித்துவ எஸ். சி. சந்திரகாசன் போன்றவர்கள், நிலைமையை சாதகமாக்கிக்கொள்ளும்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் இருப்பதா அல்லது இலங்கைக்குப் போவதா என்ற தெரிவுப் பிரச்சினை பற்றி சந்திரகாசன் குறிப்பிடுகையில் ''இந்தியாவில் இருந்தால் போஷாக்கின்மையால் இறக்க நேரிடும் இலங்கைக்குப் போனால் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகநேரிடும்'' என்றுள்ளார்.

விடுதலைப் புலிகளும் மற்றும் முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களும் இந்த அகதிகள் பிரச்சினையை தமது ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ நலன்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளத் துடிக்கின்றனர். தமிழ் மக்களின் 'மனித உரிமைகள்' காக்கும் பேரில் ஏகாதிபத்திய இராணுவ தலையீட்டுக்கு அழைப்பு விடுப்பதில் தமிழ் முதலாளிகள் இறங்கியுள்ளனர். இதை த. வி. கூ.

(7ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்